தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விஜய, சித்திரை 24, திருவள்ளுவர் ஆண்டு–2044

2013 மே 7, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்
நீள்வினையால் நீளும் குடி."

சிறந்த முயற்சி, நிறைந்த அறிவு ஆகிய இரண்டினையும் கொண்டு இடைவிடாது செய்கிற நல்ல செயல்களால் ஒருவருடைய குடிப் பெருமை உறுதியாய் உயர்வடையும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 410, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

410—

துணை மின் நிலையம்

*__8492__—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டம், அத்தாணி பகுதியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஈரோடு மாவட்டம், அத்தாணி பகுதியில் புதியதாக ஒரு 110/22 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் 2x10 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றிகளோடு அமைப்பதற்கு 12–வது ஐந்தாண்டு பெருந்திட்டக் காலத்தில் திட்டமிடப்பட்டுள்ளது. மேற்படி துணை மின் நிலையம் அமைக்க அத்தாணி பகுதியிலிருந்து 2 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள குப்பாண்டாம்பாளையம் கிராமத்தில் இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான சர்வே எண் 161/1–ல் உள்ள 3 ஏக்கர் நிலம் கண்டறியப்பட்டுள்ளது. இந்த நிலத்தைக் கையகப்படுத்த ஆணையர், இந்து சமய அறநிலையத் துறை அவர்களிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது. அனுமதி கிடைத்தவுடன் நிலம் கையகப்படுத்தப்படும். நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன் நிருவாக ஒப்புதல் பெறப்பட்டு, அத்தாணி பகுதியில் புதியதாக 110/22 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைக்கும் பணிகள் துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன் அவர்கள்.

திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து என்ற கூற்றுக்கிணங்க எப்படி, ஒரு தாய் தன் குழந்தைகளுக்கு நினைந்து, நினைந்து பாலை ஊட்டி அன்போடு வளர்க்கின்றாரோ, அதைப்போல தமிழ்நாட்டு மக்களின் தாயாக இருந்து, நினைந்து, நினைந்து பல்வேறு நலத் திட்டங்களை தன் மக்களுக்காக (மேசையைத் தட்டும் ஒலி) கொடுத்துக்கொண்டிருக்கும் எங்கள் தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர் சட்டமன்ற தொகுதி, அத்தாணி பேரூராட்சியில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கின்றனர். இப்பகுதியிலிருந்துதான் 10 கிராமங்களுக்கு மின்சாரம் செல்கின்றது. 5 ஆயிரத்திற்கு மேற்பட்ட விவசாய பம்ப்செட்கள் இங்கு உள்ளன. மேலும், 4 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் இப்பகுதியில்தான் இயங்கி வருகின்றன. குறைந்த

2013 மே 7]

அழுத்த மின்சாரம் காரணமாக பெரும்பான்மையான மின் மோட்டார்கள் இயங்க முடியாத சூழ்நிலை உள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்து சமய அறநிலையத் துறையிடமிருந்து இடத்தைத் தேர்வு செய்து மின் நிலையம் அமைக்கப்படும் என்று கூறினார்கள். அதற்கு அமைச்சர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்து, இந்தத் துணை மின் நிலையம் அமைக்க நிலத்தை விரைவாக தேர்வு செய்து பணியைத் தொடங்க அமைச்சர் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், அத்தாணி பகுதியில் பெருகிவரும் மின் தேவையைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று அந்தப் பகுதியிலே புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கு அம்மாவுடைய அரசு ஒப்புதல் வழங்கி இருக்கிறது என்பதைத் தெரிவித்தேன். தற்போது அத்தாணி பகுதிக்கு அந்தியூர் 110/22 கிலோ வோல்ட் துணை மின் நிலையத்திலிருந்தும், 7 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள கூகலூர் 110/22 கிலோ வோல்ட் துணை மின் நிலையத்திலிருந்தும் மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அந்தப் பகுதியினுடைய மின் தேவையையும், மின் பளுவையும் கருத்தில்கொண்டு, அந்தப் பகுதிக்கு உடனடியாக ஒரு துணை மின் நிலையம் தேவை என்பதை நமது அம்மாவுடைய அரசு ஏற்றுக்கொண்டு, அதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறது. 12–வது ஐந்தாண்டு பெருந்திட்டக் காலத்திலே அந்தத் திட்டம் சேர்க்கப்பட்டிருக்கிறது. உரிய நிலங்களைக் கண்டறிவதிலே உள்ள பிரச்சினைதான் துணை மின் நிலையம் அமைக்கின்ற பணிகளில் சற்று காலதாமதம் ஏற்படுவதற்குக் காரணம். அரசு நிலமாக இருந்தால் நேரடியாக அதைக் கையகப்படுத்திக்கொள்ள முடியும். (குறுக்கீடுகள்)*

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதி காக்கவும்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *தனியாருடைய இடங்களைக் கேட்டால் அவற்றைக் கையகப்படுத்துவதில் பல்வேறு சிக்கல்கள் இருக்கின்றன. தனியார் நிலங்களைக் கொடுப்பதற்கு யாரும் முன்வருவதில்லை. யாராவது கொடுக்க முன்வந்தால் அந்த நிலத்திற்குரிய மதிப்பீட்டுத் தொகையை தமிழ்நாடு மின்சார வாரியம் வழங்குவதற்குத் தயாராக இருக்கிறது. இருந்தாலும்கூட, அந்தப் பகுதியிலே தனியார் நிலங்களைக் கொடுப்பதற்கு பெரும்பாலானோர் முன்வரவில்லை. மாறாக, அந்தப் பகுதியிலே இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடங்கள் இருப்பதால் அந்த இடத்தை இப்போது தேர்வு செய்து அந்த நிலத்திற்குரிய மதிப்பீட்டுத் தொகையை வழங்கி, நிலங்களை கையகப்படுத்தி புதிய துணை மின் நிலையம் அமைக்கின்ற பணிகளைச் செய்வதற்கு தமிழ்நாடு மின்சார வாரியம் முயன்று வருகிறது. அந்த வகையிலேதான், அந்தப் பகுதியிலே இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான 3 ஏக்கர் பரப்பளவுள்ள நிலம் கண்டறியப்பட்டுள்ளது. அந்த இடத்தைக் கையகப்படுத்த வேண்டிய நடவடிக்கைகளை தமிழ்நாடு மின்சார வாரியம் விரைவாக எடுத்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று அந்தப் பணிகளை இன்னும் எவ்வளவு விரைவாக முடிக்க முடியுமோ அந்த அளவிற்கு இந்து சமய அறநிலையத் துறை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு மிக விரைவிலே அந்த நிலங்களைக் கையகப்படுத்தி, புதிய துணை மின் நிலையம் அமைக்கின்ற பணிகளைத் தொடங்குவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நிச்சயமாக உறுதியான நடவடிக்கைகளை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன் அவர்கள்.*

திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவாக அந்தப் பணிகள் தொடங்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி அமைகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.*

2013 மே 7]

திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணி தொகுதியிலே அஞ்சுபுத்தூர், தச்சூர் போன்ற பகுதிகளிலே துணை மின் நிலையம் அமைப்பதற்கு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதாக அறிகின்றேன். அதேபோல, கொருக்காத்தூர் பகுதிக்கும் ஒரு துணை மின் நிலையம் அவசியம் தேவைப்படுகின்றது. எனவே, இந்த 3 பகுதிகளிலேயும் துணை மின் நிலையம் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதிகளிலே இருக்கின்ற மின்பளுவும் அதேபோன்று இருக்கின்ற மின்கட்டமைப்பு வசதிகளையும் ஆய்வு செய்து, அந்தப் பகுதியிலே தேவை ஏற்படின் எந்தெந்த இடங்களிலே புதிய துணை மின் நிலையங்கள் தேவைப்படுகிறதோ, அந்தந்த இடங்களிலே புதிய துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கோ அல்லது இருக்கின்ற துணை மின் நிலையங்களைத் தரம் உயர்த்துவதற்கோ வேண்டிய உரிய நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 411, மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

411—

வணிக வளாகம்

***1239—திரு. சோழன் சித. பழனிச்சாமி:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—